செ.வெ.எண்: 03 / மார்ச் நாள்: 02.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் சார்பாக நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில்

## மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஆசி வழங்கி வாழ்த்தினார்

இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோயில் கிராமத்தில் இன்று (02.03.2016) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டதுறையின் சார்பாக கர்ப்பிணிப்பெண்களுக்காக நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஆசி வழங்கி வாழ்த்தினார். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு தலைமை வகித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டதுறை மூலம் பல்வேறு குழந்தைகள் நல மற்றும் மகளிர் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக கருவுற்ற பெண்களின் நலனுக்காக அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சத்துமாவு மற்றும் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கருவுற்ற பெண்களுக்கு உதவித்தொகையாக ரூபாய் 12 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் 32,29,000 கருவுற்ற பெண்களுக்கு ரூபாய் 3016 கோடி மதிப்பில் மகப்பேறு நிதியுதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர, அரசு மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் தாய்மார்களுக்கு தாயுள்ளத்துடன் குழந்தை பராமரிப்பிற்கு தேவையான 16 வகையான பொருட்கள் உள்ளடக்கிய அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. ஆதரவற்ற குழந்தைகளை பேணிப்பராமரித்து சமுதாயத்தில் உயர்ந்த நிலையினை அடைந்திடும் வகையில் தொட்டில் குழந்தை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தி வரும் இதுபோன்ற தாய்,சேய் நல திட்டங்களின் காரணமாக தமிழகத்தில் , பிரசவத்தின் போது ஏற்படும் தாய்,சேய் இறப்புகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.பெ.கிருஷ்ணவேணி, வட்டார மருத்துவ அலுவலர் மரு.எஸ்.பொற்செல்வன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.ரஜினிகாந்த், நயினார்கோயில் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.வி.கே.பி.ராஜேஸ்வரி கார்மேகம், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி.பி.விசுபாவதி உட்பட அரசு அலுவலர்கள், கர்ப்பிணி பெண்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படங்கள்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளன.**